**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.**

**முன்னிலை : திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,**

**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**

**2026–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் நாள் வியாழக்கிழமை**

**திருவள்ளுவராண்டு 2056 விசுவாவசு வருடம் மார்கழி மாதம் 15 ஆம் நாள்**

**E.P.No.24/2024**

**in**

**O.S.No.286/2023**

**(CNR No.TNDG190003322024)**

கனகராஜ் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

முத்துலட்சுமி ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனுவானது கடந்த 04.06.2024ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 26.06.2024ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்னர் கடந்த 28.01.2026 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.T.கனிமொழி அவர்கள் முன்னிலையாகியும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.R.பழனிச்சாமி அவர்கள் முன்னிலையாகி எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் கடந்த 06.11.2025ம் தேதி ஒருதலைபட்ச நிலைக்குட்படுத்தப்பட்டும், ஏல அறிவிப்பை பெற்றுக்கொண்ட எதிர்மனுதாரர் அழைத்தும் முன்னிலையாகாத நிலையிலும், மனு, பிரமாணப்பத்திரிக்கை, சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்குட்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

**1.** இந்த நிறைவேற்று மனுவானது தீர்ப்பாணைதொகை, பின்வட்டி செலவுதொகை ஆகியவை வசூலாகும்பொருட்டு எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட உடன்ஜப்தி செய்யப்பட்ட சொத்துக்களை நீதிமன்றத்தின் மூலம்

ஏலம்விட்டு தொகையை வசூலித்து மனுதாரர்/வாதிக்கு வழங்கிட உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 66 ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் அசல் வழக்கின் வாதி.**

மனுதாரர், எதிர்மனுதாரருக்கு எதிராக கடனுறுதிசீட்டின் பேரிலான கடன் தொகையை வசூல் செய்ய வேண்டி அசல் வழக்கு எண்.286/2023 வழக்கினை தாக்கல் செய்த வழக்கில் மனுதாரருக்கு ஆதரவாக கடந்த 11.03.2024 ம் தேதியில் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஜப்தி செய்யக்கோரி இ.ம.எண்.797/2023 என்ற எண்ணில் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு சொத்துக்கள் ஜப்தி செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர், மனுதாரருக்கு சேர வேண்டிய தீர்ப்பாணை தொகையினை செலுத்தாமல் வீண் காலம் கடத்தி வந்ததால், எதிர்மனுதாரருக்கு சொந்தமான பற்றுகை செய்யப்பட்ட மனு சொத்துக்களை ஏலம்விட்டு தொகையை வசூல் செய்ய உத்தரவிட வேண்டி மனுதாரரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனுவை ஏல நடவடிக்கைக்கு உட்படுத்தி ஏலத்தை நிர்ணயம் செய்து (Settlement of Proclamation) உத்தரவிற்காக மனுவை அனுமதிக்க வேண்டுமா? அல்லது வேண்டாமா? என்பதே பிரச்சனையாகும்.

**4. பிரச்சனைக்கான தீர்வு :**

**4.1.** வழக்காவணங்களை பரிசீலனை செய்யும்போது, மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர் மீது கடனுறுதிசீட்டின் பேரிலான கடன் தொகையை வசூல் செய்யக்கோரி அசல் வழக்கு எண்.286/2023 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பிரதிவாதிக்கு எதிராக கடந்த 11.03.2024 ம் தேதி தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இ.ம.எண்.797/2023 என்ற எண்ணில் அசல் வழக்கின் தீர்ப்பாணைக்கு முன்பாக பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தினை பற்றுகை செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 06.02.2024 ம் தேதி நீதிமன்ற

உத்தரவின்படி எதிர்மனுதாரரின் சொத்து பற்றுகை செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு, தற்போதுவரை மனுதாரர் தீர்ப்பாணையின் பலனை அடைய இயலாத நிலையில் உள்ளார் என்பதையும், மனுதாரருக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகையை எதிர்மனுதாரர் செலுத்தவில்லை என்பதையும் அறிய முடிகிறது.

**4.2.** மனுச்சொத்துக்களை ஏலநடவடிக்கைக்கு உட்படுத்தும் வகையில் Sale papers தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 05.02.2024 ஆம் தேதி நிறைவேற்று மனுசொத்துக்களின் மதிப்பு ரூ.2,40,000/– என முதுநிலைகட்டளைதாரரால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஏல அறிவிப்பிற்காக அனுப்பப்பட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்ட எதிர்மனுதாரர் வழக்குரைஞர் வழியாக முன்னிலையாகி எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினாலும், அழைத்தும் முன்னிலையாகாத காரணத்தினாலும் கடந்த 06.11.2025 ம் தேதி ஒருதலைபட்ச நிலைக்குட்படுத்தப்பட்டுள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ள மனு சொத்துக்களின் மதிப்பு ரூ.8,00,000/– என குறிப்பிடப்பட்டுள்ளது.

**4.3** இந்நீதிமன்றம் மனு சொத்துக்களின் தற்போதைய மதிப்பு ரூ.8,00,000/– என மதிப்பீடு செய்துள்ள நிலையில், ஏலச்சரத்துக்களை (Settlement of Proclamation) நிர்ணயம் செய்து மனு சொத்துக்களை ஏலநடவடிக்கைக்கு உட்படுத்த இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. மனுவின் தன்மையை கருத்தில்கொண்டு செலவுதொகை பற்றிய உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை.

**5. முடிவில்,**

**இம்மனு செலவுதொகையின்றி அனுமதித்து Settlement of proclamation நிர்ணயம் செய்ய உத்தரவிடப்படுகிறது. Settlement of proclamation by 09.02.2026.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026–ஆம் வருடம் ஜனவரி மாதம் 29 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

C JAYAPPRAKASH Digitally signed by C JAYAPPRAKASH Date: 2026.01.29 14:06:21 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்.**

| | |
|---|---|
| **மனுதாரர் /வாதி தரப்பு தரப்பு சாட்சிகள்** | – இல்லை |
| **மனுதாரர்/வாதி தரப்பு சான்றாவணங்கள்** | – இல்லை |
| **எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சிகள்** | – இல்லை |
| **எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்** | – இல்லை. |

C JAYAPPRAKASH Digitally signed by C JAYAPPRAKASH Date: 2026.01.29 14:06:26 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்.**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.**
**முன்னிலை : திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,**
**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**
**2026–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் நாள் வியாழக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2056 விசுவாவசு வருடம் மார்கழி மாதம் 15 ஆம் நாள்**
**E.P.No.24/2024**
**in**
**O.S.No.286/2023**
**(CNR No.TNDG190003322024)**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், காளாஞ்சிபட்டி கிராமம், பாவாயூரில் வசிக்கும் பழனிச்சாமி மகன் இந்து வயது சுமார் 35 உள்ள கனகராஜ்

... மனுதாரர்/வாதி

/எதிர்/

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், காளாஞ்சிபட்டி கிராமம், பாவாயூரில் வசிக்கும் லேட்.பொன்னுச்சாமி மனைவி இந்து வயது சுமார் 57 உள்ள முத்துலட்சுமி ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த நிறைவேற்று மனுவானது தீர்ப்பாணைதொகை, பின்வட்டி செலவுதொகை ஆகியவை வசூலாகும்பொருட்டு எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட உடன்ஜப்தி செய்யப்பட்ட சொத்துக்களை நீதிமன்றத்தின் மூலம் ஏலம்விட்டு தொகையை வசூலித்து மனுதாரர்/வாதிக்கு வழங்கிட உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 66 ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனு தாக்கல் செய்யப்பட்ட நாள்** : 04.06.2024

**உத்தரவாணை**

இந்த மனுவானது கடந்த 04.06.2024ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 26.06.2024ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்னர் கடந்த 28.01.2026 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.T.கனிமொழி அவர்கள் முன்னிலையாகியும்

எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.R.பழனிச்சாமி அவர்கள் முன்னிலையாகி எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் கடந்த 06.11.2025ம் தேதி ஒருதலைபட்ச நிலைக்குட்படுத்தப்பட்டும், ஏல அறிவிப்பை பெற்றுக்கொண்ட எதிர்மனுதாரர் அழைத்தும் முன்னிலையாகாத நிலையிலும், மனு, பிரமாணப்பத்திரிக்கை, சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்குட்பட்டு இன்று இந்நீதிமன்றம் பின்வரும் கட்டளை மற்றும் உத்தரவாணையை வழங்குகிறது.

1. இம்மனு அனுமதித்து Settlement of proclamation நிர்ணயம் செய்ய உத்தரவிடப்படுகிறது. Settlement of proclamation by 09.02.2026.

2. செலவு தொகை இல்லை.

**சொத்து விபரம்**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், காளாஞ்சிபட்டி கிராமம்,

1. சர்வே 130/1A நிரில் தற்கால சப்டிவிசன்படி பட்டா எண்.24க்கு புதிய சர்வே எண்.130/1A1 நிர் புஞ்சை ஹெக் 0.30.00க்கு ஏ 0, செ 74 உள்ளதில் ஏ 0, செ30 க்கு ஹெக் 0.12.15 உள்ள நிலத்திற்கு நான்குமால் விபரம்:–

| | | |
|---|---|---|
| வடக்கு | – | சர்வே 130/1A1 நிரில் சரஸ்வதி அவர்கள் நிலம் |
| தெற்கு | – | நாச்சிமுத்துகவுண்டர் அவர்கள் நிலம் |
| கிழக்கு | – | காளியப்பகவுண்டர் அவர்கள் நிலம் |
| மேற்கு | – | சர்வே 131 நிரில் உள்ள தென்வடல் வண்டிப்பாதை |

இதற்குள் மேற்படி ஹெக் 0.12.15 க்கு ஏ 0, செ30 உள்ள நிலமும்.

2. சர்வே 131 நிரில் தற்கால சப்டிவிசன்படி பட்டா எண்.24க்கு புதிய சர்வே 131/1 நிர் புஞ்சை ஹெ க் 0.33.00க்கு ஏ 0, செ82 உள்ளதில் ஏ 0, செ30 க்கு ஹெக் 0.12.15 உள்ள நிலத்திற்கு நான்குமால் விபரம்:–

| | | |
|---|---|---|
| வடக்கு | – | சர்வே 130/1A1 நிரில் சரஸ்வதி அவர்கள் நிலம் |
| தெற்கு | – | நாச்சிமுத்துகவுண்டர் அவர்கள் நிலம் |
| கிழக்கு | – | சர்வே 131 நிரில் உள்ள தென்வடல் வண்டிப்பாதை |
| மேற்கு | – | தென்வடல் ஓடை |

இதற்குள் மேற்படி ஹெக் 0.12.15 க்கு ஏ 0, செ30 உள்ள நிலமும்.

மேலும் மேற்படி சொத்துக்களுக்கு சர்வே 131 நம்பரில் தென்வடலாக செல்லும் மாமூல் பொதுப்பாதையில் தாங்களும், தங்கள் வகையறா வண்டி வாகனாதிகள் ஆட்கள் போய்வரும் மாமூல் பொதுப்பாதை பாத்தியமும் சகல பாத்தியங்களும் சேர்ந்து. மதிப்பு ரூ.8,00,000/-

2026-ம் வருடம் ஜனவரி மாதம் 29ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.01.29 14:06:35 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்.**